இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 08-08-2025

# ஓராயிரம் முறை சொல்வோம்!

‘பாவி’ சண்முகமாக இருந்து, ‘காவி’ சண்முகமாக ஆகி இருக்கும் சி.வி.சண்முகத்தின் உச்சந்தலையில் ஓங்கிக் கொட்டி இருக்கிறது உச்ச நீதிமன்றம்.

**மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பெயரைப் பயன்படுத்தக் கூடாதாம். ‘ஸ்டாலின்’ என்ற பெயரைப் பார்த்தாலே பயம் வருகிறது பழனிசாமி கூட்டத்துக்கு. அதனால் சண்முகத்தை இறக்கி விட்டு வழக்குப் போட வைத்தார். ஆனால் அது உச்சநீதிமன்றத்தில் செல்லுபடி ஆகவில்லை. ‘இப்படி ஒரு அபத்தமான வழக்குப் போட்டதற்காக இருபது லட்சம் ரூபாய் அபராதம் போடட்டுமா?’ என்று கேட்ட உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி அமர்வு, ‘ஐயோ பாவம்’ பார்த்து பத்து லட்சம் ரூபாயை அபராதமாகவே போட்டு விட்டார்கள். இதன்பிறகாவது பழனிசாமி – சண்முகம் கூட்டத்துக்கு உறைக்குமா எனத் தெரியவில்லை.**

தமிழ்நாடு அரசின் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்துக்கு சென்னை உயர்நீதிமன்றம் விதித்த தடையை நீக்கி உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

தமிழ்நாடு அரசின் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்துக்கு எதிராக அரசியல் வன்மத்தோடு அ.தி.மு.க. முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.சண்முகம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். சி.வி.சண்முகத்தின் மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம், தமிழ்நாடு அரசின் திட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் பெயரை பயன்படுத்த தடை விதித்தது. சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக தி.மு.க. மற்றும் தமிழ்நாடு அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

**‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டம், பொதுமக்கள் சார்ந்த திட்டம் என்றும், இதுவரை 9 ஆயிரம் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும், வழக்கு தொடர்ந்த நபர் முன்பு அமைச்சராக இருந்து 25 திட்டங்களை அப்போதைய முதலமைச்சர் பெயரில் செயல்படுத்தியவர் என்றும், தற்போது அவர் அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார் என்றும் அரசு தரப்பிலும் தி.மு.க. தரப்பிலும் வாதங்கள் வைக்கப்பட்டன. இதனையடுத்து, தமிழ்நாடு அரசின் திட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் பெயரை பயன்படுத்த சென்னை உயர்நீதிமன்றம் விதித்த தடையை நீக்கி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.**

**“அரசியல் தலைவர்கள் பெயரில் திட்டங்கள் செயல்படுத்துவது நாடு முழுவதும் பின்பற்றப்படும் ஒரு நிகழ்வாக உள்ளது”** என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பெயரிலும் இது போன்ற திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுவதாக தெரிவித்த நீதிபதிகள், ஒரு அரசியல் தலைவரை மட்டும் தேர்ந்தெடுத்து மனுதாரர் வழக்கு தொடர்ந்து இருப்பதாகவும், இது அவரது அரசியல் உள்நோக்கத்தை காட்டுகிறது என்றும் கண்டனம் தெரிவித்தனர்.

மனுதாரர் சட்டத்தை தவறாக புரிந்து கொண்டு மனுத்தாக்கல் செய்து இருப்பதாகவும், இது சட்ட நடைமுறையை தவறாக பயன்படுத்துவதாகும் என்றும் நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்தனர். வழக்கு தொடர்ந்த சி.வி.சண்முகத்துக்கு ரூ.10 லட்சம் அபராதம் விதித்த நீதிபதிகள், அபராதத் தொகையை ஒரு வாரத்தில் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டனர். அபராதத் தொகையை ஒரு வாரத்திற்குள் செலுத்தத் தவறினால் சி.வி.சண்முகம் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கலாம் என்றும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

**சூடு,சொரணை இருந்தால் சண்முகம், பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும்.**

- **உங்களுடன் ஸ்டாலின்**
- **நலம் காக்கும் ஸ்டாலின்**
- **ஓரணியில் தமிழ்நாடு – ஆகிய முன்னெடுப்புகள் கோடிக் கணக்கான மக்களை நாள்தோறும் சென்றடைந்து வருகிறது. இந்த மூன்று முன்னெடுப்புகளும் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் ஏற்படுத்திய தாக்கம் என்பது மிகமிக முக்கியமானது.**

அரசுக்கும் மக்களுக்குமான நெருக்கத்தை அதிகரித்து விட்டது உங்களுடன் ஸ்டாலின், நலம் காக்கும் ஸ்டாலின் ஆகிய திட்டங்கள். கோரிக்கை வைத்தால் உடனே நிறைவேறும் என்று மக்கள் உறுதியாக நம்பி வந்து மனுக்களைக் கொடுக்கிறார்கள். இந்த நல் நம்பிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெற்றுவிட்டார்கள் என்பதுதான் பழனிசாமிக்கு ஏற்பட்டுள்ள கடுப்பாகும். பழனிசாமியிடம் மனுக் கொடுத்தால் குப்பைக்குப் போகும் என்பதை அறிந்தவர்கள் தமிழ்நாட்டு மக்கள். அதனால்தான் அவரைத் தோல்வி அடையச் செய்து வீட்டுக்கு அனுப்பினார்கள்.

**‘உங்கள் தொகுதியில் ஸ்டாலின்’ என்ற முன்னெடுப்பு மூலமாகத் தேர்தலுக்கு முன் பெற்ற மனுக்களை முதலமைச்சர் ஆன 100 நாட்களுக்குள் தீர்த்து வைத்தவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ‘முதல்வரின் முகவரி’ என்ற திட்டத்தைத் தொடங்கி, அதற்காக தனி அலுவலகத்தை உருவாக்கி அனைத்து மனுக்களுக்கும் உடனுக்குடன் தீர்வு கண்டு வருகிறார் முதலமைச்சர் அவர்கள். ‘நீங்கள் அரசுக்கு அனுப்ப வேண்டாம், நாங்களே உங்கள் வீட்டுக்கு அருகில் வந்து மனுக்களைப் பெற்றுக் கொள்கிறோம்’ என்ற அடிப்படையில் உருவாக்கப்பட்டதுதான் ‘உங்களுடன் ஸ்டாலின்’ என்ற முகாம்கள் ஆகும்.**

ஒரு நியாயமான எதிர்க்கட்சி, ஒரு நல்ல எதிர்க்கட்சி இந்தத் திட்டத்தை வரவேற்றிருக்க வேண்டும். ‘மக்கள் கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றித் தாருங்கள்’ என்று கோரிக்கை வைத்திருக்க வேண்டும். மாறாக, ‘மக்களிடம் மனு வாங்குவதே தவறு’ என்ற உள்நோக்கத்தோடு ஒரு வழக்கை தாக்கல் செய்கிறது அ.தி.மு.க. என்றால் அவர்களது நோக்கம் ‘ஸ்டாலின்’ என்ற பெயர் மட்டுமல்ல; மக்களின் கோரிக்கைகள் நிறைவேறிவிடக் கூடாது என்ற கெட்ட எண்ணமும் அதிகமாக இருக்கிறது. அதன் அடையாளம்தான் இந்த வழக்கு ஆகும்.

**‘ஸ்டாலின்’ என்ற பெயரைச் சூட்டக்கூடாது என்று சொல்வதற்கான அருகதை அ.தி.மு.க.வுக்கு இல்லை. எல்லாத் திட்டத்துக்கும் ‘அம்மா’ பெயர் சூட்டியவர்களுக்கு இதைச் சொல்ல அருகதை இல்லை. ஆட்சி மாற்றத்துக்குப் பிறகும் ‘அம்மா’ பெயரை நீக்காமல் வைத்திருப்பதும் இன்றைய முதலமைச்சரின் பெருந்தன்மை ஆகும். அதைப் புரிந்து கொள்ளும் பக்குவம் பழனிசாமிக்கு இல்லை.**

**நாம் ‘ஸ்டாலின்’ என்ற பெயரை ஓராயிரம் முறை சொல்வோம்!**



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி நேற்று (07.08.2025) ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலை இருக்கும் இடத்திலிருந்து மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அவர்களின் நினைவிடம் வரை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைதிப் பேரணி நடைபெற்றது. இப்பேரணியில், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், டி.ஆர்.பாலு, கனிமொழி கருணாநிதி உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

### சென்னை கம்பன் கழகத்தின் சார்பில் – டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. வரவேற்புரையில்

# ‘பொலிவுமிகு பொன்விழா 51’ நிறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று விருதுகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்!

**சென்னை, ஆக.8-**

**சென்னை கம்பன் கழகத்தின் சார்பில், ‘பொலிவுமிகு பொன்விழா நிறைவு’, ‘கம்பன் விழா-51’ ஆகிய நிகழ்வுகள் சென்னை மயிலாப்பூர் ஏ.வி.எம். ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் இன்று (8-ஆம் தேதி) முதல் 10-ஆம் தேதி வரை 3 நாட்கள் நடைபெற உள்ளது. இன்று மாலை 5 மணிக்கு தொடங்கும் ‘பொலிவுமிகு பொன்விழா நிறைவு’ நிகழ்ச்சிக்கு முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமை தாங்குகிறார்.**

சென்னை கம்பன் கழகத்தின் தலைவர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. வரவேற்கிறார். தெ.ஞான சுந்தரம், சாரதா நம்பி ஆரூரன், பழ.பழநியப்பன், சுகிசிவம், இலங்கை ஜெயராஜ் ஆகியோருக்கு ‘இயற்றமிழ் அறிஞர்’ என்ற விருதி னையும், திரைப்பட பாடலாசிரியர் கவிப்பேரரசு வைரமுத்துக்கு சென்னை ஆழ்வார்கள் ஆய்வு மையம் நிறுவிய ‘கவிச் சக்கரவர்த்தி கம்பர்’ விருதையும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கி பேசுகிறார். இதையடுத்து விருது பெற்றவர்களை கவிப்பேரரசு வைரமுத்து வாழ்த்தி பேசுகிறார்.

இதேபோல தமிழ் இலக்கியத் துறைக்கு களப்பணி செய்துவரும் 19 பேருக்கும், மாநில அளவிலான இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட உள்ளன. இதனைத் தொடர்ந்து 9-ஆம் தேதியன்று, கம்பன் படைத்த ‘விருத்த சோலை யில் வியப்பு மலர்கள்’ என்ற கருப்பொருளை மையமாக கொண்டு இந்த ஆண்டு விழா தொடங்குகிறது. ‘அமிழ்தக் கம்பன் ஆய்வுரை அரங்கம்’, ‘முத்தமிழ்க் கம்பன் மொழி மாலை அரங்கம்’ என்ற தலைப்புகளில் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

### இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட

# தமிழக மீனவர்கள் - படகுகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்வீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு கடிதம்!

**சென்னை, ஆக. 8 -**

**இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கு தேவையான நடவ டிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 14 மீனவர்கள், நேற்று முன்தினம் (06.08.2025) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கைக் காவலில் உள்ள அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப் பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்திட வேண்டுமென்று வலியுறுத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (06.08.2025) கடிதம் எழுதி யுள்ளார்.

அக்கடிதத்தில், இலங்கைக் கடற்படையினரால் 06.08.2025 அன்று அதிகாலை 14 இந்திய மீனவர்கள், அவர்களது இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகு மற்றும் ஒரு பதிவு செய்யப்படாத நாட்டுப்படகுடன் சிறை பிடிக்கப்பட்டதை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தனி கவனத்திற்குக் கொண்டு வருவதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட் டுள்ளார்.

இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதை முடிவுக்குக் கொண்டுவர ஒன்றிய அரசு தூதரக ரீதியாக தலையிட வேண்டும் என்று தான் பலமுறை வேண்டுகோள் விடுத்த போதிலும், இது போன்ற கைது சம்பவங்கள் தொடர்வது மிகவும் கவலையளிக்கிறது என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், 2025 ஆம் ஆண்டில் மட்டும் நடைபெற்ற கைது சம்பவங்களில், இது 17வது சம்பவம் என்றும் தனது கடிதத்தில் கோடிட் டுக் காட்டியுள்ளார்.

தற்போது, 237 மீன்பிடிப் படகுகளும், 80 மீனவர்களும் இலங்கை அதிகாரிகளின் காவலில் இருப்பதாகவும், மீனவர்கள், அவர்களின் ஒரே வாழ்வாதாரமான பாரம்பரிய நீர்நிலைகளில் மீன்பிடிக்கும் உரிமையை இழந்துள்ளதை தனது கடிதத்தில் வேதனையுடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டி யுள்ளார்.

எனவே, கைது செய்யப்பட்ட அனைத்து தமிழக மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிப்பதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகளை எடுத்திடுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### அரசு மருத்துவமனையை திறந்து வைத்து 20 ஆயிரம் பேருக்கு ரூ.1700 கோடி மதிப்பிலான பட்டாக்களை வழங்கிட வருகை தரும்

# முதல்வருக்கு பல்லாவரம் - தாம்பரம் வரை வழியெங்கும் மக்கள் திரண்டு நின்று கோலாகல வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கை!



*காஞ்சிபுரம், ஆக.8-*

*ரூ.115 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையை திறந்து வைக்கவும் பல்லாவரத்தில் 20 ஆயிரம் ஏழை எளியவர்களுக்கு ரூ.1700 கோடி மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கிடவும் நாளை 9ஆம் தேதி காலை வருகை தரும் முதல்வர் அவர்களுக்கு, பல்லாவரம் முதல் தாம்பரம் வரை வழியெங்கும் மக்கள் திரண்டு நின்று எழுச்சியுடன் கோலாகலமான வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட திமுக செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கூறியுள்ளார்.*

*இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:*

*நாளை ஆகஸ்ட் 9ஆம் தேதி காலை 9.00 மணியளவில் ரூ.115 கோடி மதிப்பில் தாம்பரத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாவட்ட அரசு மருத்துவமனை திறப்பு வழா மற்றும் கண்டோன்மெண்ட் பல்லாவரத்தில் 20 ஆயிரம் ஏழை எளியவர்களுக்கு ரூ.1700 கோடி மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிடும் மாபெரும் விழா நாளை 9ஆம் தேதி காலை 10.00 மணியளவில் நடைபெற உள்ளது.*

*கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் இந்த இரு விழாக்களிலும் பங்கேற்று தாம்பரத்தில் அரசு தலைமை மருத்துவமனையை திறந்து வைத்து, பின்னர் அவர் ஆலந்தூர் தொகுதி, கண்டோன்மெண்ட் பழைய டிரங்க் சாலையில் அமைக்கப்பட்டுள்ள திடலில் நடைபெறும் விழாவில் பங்கேற்று 20,000 பேருக்கு இலவச வீட்டுமனை பட்டாவையும் வழங்கி பேருரை ஆற்றுகிறார்.*

*இம்மாபெரும் விழாவில் கலந்துகொள்ள தாம்பரம் மற்றும் பல்லாவரத்திற்கு வருகை தரும் நம்முடைய ஒப்பாரும் மிக்காரும் இலா, நம் நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களுக்கு பல்லாவரம் பான்ட்ஸ் கம்பெனி பாலத்தில் இருந்து தாம்பரம் அரசு மருத்துவமனை வரை வழியெங்கும் கழகத்தினரும் பொது மக்களும் ஆயிரக்கணக்கில் அணி திரண்டு நின்று கோலாகலமான வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.*

*அதேபோல தாம்பரம் அரசு தலைமை மருத்துவமனையை திறந்து வைத்து விட்டு க.பல்லாவரத்திற்கு வருகை தரும் நம்முடைய உயிரனைய அன்புத்தலைவர் முதல்வர் அவர்களுக்கு கண்டோன்மெண்ட் பல்லாவரம் குன்றத்தூர் சாலை சந்திப்பு முதல் அரசு விழா நடைபெறும் பழைய டிரங்க் சாலை வரை பொது மக்களும் கழகத்தினரும் ஆர்ப்பரித்து நின்று உற்சாக வரவேற்பு அளிக்க உள்ளனர்.*

*இந்த இரு வரவேற்பு நிகழ்ச்சியிலும் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அலைகடலென திரண்டு வந்து மிகவும் எழுச்சியான முறையில் வரவேற்பு அளித்திட வேண்டும் என்று அன்புடன் அழைக்கிறேன்.*

*இவ்வரவேற்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்பது “நமது கடமை” “நமது உரிமை” என்ற அந்த லட்சிய உணர்வோடு கழகத்தினர் அனைவரும் தமது கரங்களில் கழக கொடியேந்தி அலைகடலென திரண்டு வாரீர் ! வாரீர் ! என்று அன்புடன் அழைக்கிறேன்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.*



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் நேற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் முனைவர் கி.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) மற்றும் அவரது புதல்வர் இரா.அருள் செல்வன், கலைஞர் இல்ல உதவியாளர் சு.மோகன் ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர்.